# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| * | கூட்டு நிருவாகக் கூற்று | 3 |
| * | நிர்வாக சபை உறுப்பினர்கள் | 4 |
| * | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் | 6 |
| * | தத்துவ ரீதியான அதிகார மீளாய்வு மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான செயற்பணி | 7 |
| | அ. தத்துவ ரீதியான அதிகாரங்கள் | |
| | ஆ. நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள் | |
| | இ. நிறுவகத்தின் மதியுரைச் சேவைகள் - இலக்குக் குழுக்கள் | |
| | ஈ தொழில்ரீதியான ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும் - தேசிய மற்றும் சர்வதேச கற்கை, பயிற்சி நிறுவனங்களுடனான தொடர்புகள் | |
| | உ. நிறுவகத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு | |
| | ஊ. உதவிப் பதவியணியினரை வளர்த்துக்கொள்ளல் | |
| * | 2012 ஆம் ஆண்டுக்கான நிறுவத்தின் பதவியணியினரது ஒழுங்கமைப்பு | 13 |
| * | 2012 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை | 14 |
| | மனித வள அபிவிருத்திப்பிரிவு | |
| | பொறியியல் பிரிவு | |
| | பொது முகாமைத்துவப் பிரிவு | |
| | பௌதீக திட்டமிடல் பிரிவு | |
| | நிதி முகாமைத்துவப் பிரிவு | |
| | சட்ட விவகாரப் பிரிவு | |
| | மாகாண பயிற்சி பிரிவு | |
| | திறன்விருத்திப் பிரிவு | |
| | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | |
| * | நிதிசார் தகவல்கள் 2012 | 27 |
| | அ. நிதிச் செயற்பாடுகள் பற்றிய கூற்று | |
| | ஆ. நிதி நிலைமை பற்றிய கூற்று | |
| | இ. திரண்ட காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று | |
| | ஈ. தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் பற்றிய கூற்று | |
| | உ. கணக்கீட்டுக் குறிப்புக்கள் | |
| * | நிறைவு | 37 |
| * | கணக்காய்வாளர்களின் கருத்து | |
| * | கணக்காய்வுக் கருத்துக்கள் பற்றிய நிறுவகத்தின் விளக்கங்களும், தீர்வுகளும். | |

## 1.0 கூட்டு நிருவாகக் கூற்று

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் (1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது) |
| செயற்பாடு ஆரம்பித்த திகதி | : | 15.10.1999 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இலக்கம் 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 |
| கணக்காய்வாளர்கள் | : | கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம். |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி, சுதந்திர சதுக்கக் கிளை, கொழும்பு – 07 |
| வெளிநாட்டு நிறுவனங்கள் | : | அ **LOGOTRI**<br>· ஆசிய பசுபிக் உள்ளூராட்சி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களின் வலையமைப்பு<br>ஆ **CEYNET**<br>· மனிதக் குடியிருப்பு முகாமைத்துவத்துக்கான பிராந்திய உள்ளூராட்சி வலையமைப்பு<br>இ **CLGF**<br>· பொதுநலவாய உள்ளூராட்சி ஒன்றியம்<br>ஈ. **KILA**<br>மாகாண நிருவாகம் பற்றிய கேரளா நிறுவகம்<br>உ. **AIILG**<br>சுய உள்ளூராட்சிக்கான கூட்டு இந்திய நிறுவகம் |
| உள்நாட்டு நிறுவனங்கள் | : | அ இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியம்<br>ஆ ஆசிய மன்றம், கொழும்பு |
| இணைந்த கருத்திட்டங்கள் | : | அ உலக வங்கியினால் நிதி வழங்கப்படுகின்ற வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் – 22 மி.ரூ. |
| | : | ஆ உள்ளூராட்சி மன்றங்களுக்கான துணை விதிகளை ஆக்குதல் – நிதிப் பங்களிப்பு ஆசிய மன்றம் – 9.1 மி.ரூ. |
| | : | இ உள்ளூராட்சி மன்றங்களின் புதிய உறுப்பினர்களை பயிற்றுவித்தல் – நிதிப் பங்களிப்பு உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் 11.9 மி.ரூ. |

## 2.0 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் நிர்வாக சபை

பதவிவழியாக நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் எட்டு பேரையும் (08), நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் நான்கு பேரையும் (04) கொண்டதாக பன்னிரண்டு (12) உறுப்பினர்களை இந்த நிர்வாக சபை உள்ளடக்கியுள்ளது.

2.1 பதவி வழியாக மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறாகும்.

- டாக்டர் நிஹால் ஜயதிலக்க – 2012 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை

- திரு ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க – 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் - தவிசாளர்
  செயலாளர் – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

- திரு பீ.பி. அபேகோன் - உறுப்பினர்
  செயலாளர் – பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

- திரு விமல் ரூபசிங்க – 2012 யூன் 27 ஆம் திகதி முதல் - உறுப்பினர்
  செயலாளர், கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு

- திரு எம்.ஜி. ஜயரத்ன – 2012 ஆகஸ்ட் 14 வரை

- திரு பி.எச்.எல். விமலசிறி – 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல்
  செயலாளர், நிருமாண, பொறியியல் சேவைகள்,
  வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு - உறுப்பினர்

- திரு ஏ.கே. செனவிரத்ன - உறுப்பினர்
  மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
  தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்

- பேராசிரியர் (திருமதி) ஏ.எஸ்.பி. அபயரத்ன - உறுப்பினர்
  மதியுரையாளர் –பேராதனை பல்கலைக் கழகம்

- டாக்டர் எம்.ஏ. அப்துல் ரகீஸ்து - உறுப்பினர்

- பொறியியலாளர் எம்.எஸ். நசீர் - உறுப்பினர்
  ஒருங்கிணைப்புச் செயலாளர்,
  கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்

- திரு எம்.எச்.ஏ. சமத் - உறுப்பினர்
  அந்தரங்கச் செயலாளர்,
  கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்

- திரு ஐ.ஏ. ஹமீட்
  பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர், - உறுப்பினரும்,
  இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் கூட்ட ஏற்பாட்டாளரும்

நிருவாக சபையின் செயலாளர்

- திருமதி நிரஞ்சலா பெரேரா

## 3.0 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்

2012 ஆம் ஆண்டில் பின்வரும் உறுப்பினர்கள் மேற்படி குழுவின் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அ. திரு ஏ.கே. செனவிரத்ன - தவிசாளர்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

ஆ. பொறியியலாளர் எம்.எஸ். நசீர் - உறுப்பினர்
ஒருங்கிணைப்புச் செயலாளர்,
கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

இ. திரு எம்.எச்.ஏ. சமத் - உறுப்பினர்
அந்தரங்கச் செயலாளர்,
கௌரவ உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்.

ஈ. - ஏற்பாட்டாளர்

**வெளிப்புற அவதானிப்பாளர்கள்**

திரு டி.எல்.பி. டயஸ்
உதவிக் கணக்காயர்வாளர் தலைமை அதிபதி

திரு கே.எஸ். தயாரத்ன
கணக்காய்வு அத்தியட்சகர்.

**சபையின் செயலாளர்**

திருமதி நிரஞ்சலா பெரேரா - பணிப்பாளர் சபையின் செயலாளர்

## 04. தத்துவ ரீதியான அதிகார மீளாய்வு மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான செயற்பணி

நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான எதிர்கால நோக்கு அவசியமாக இருந்த சூழலில் இந்த நிறுவகம் உருவாக்கப்பட்டது. இந்த நோக்கை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக அது பற்றி ஆராய்ந்து சிபார்சுகளைச் சமர்ப்பிக்கும் பொருட்டு 1997 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. நாட்டின் உள்ளூராட்சித் துறையின் செயலாற்றுகையை வளர்க்கும் தேவைப்பாட்டுக்கான செயற்பணியை நிறைவேற்றுவதற்காக புதிய நிருவாகம் ஒன்றை உருவாக்குவதன் முக்கியத்துவம் இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மக்கள் எதிர்பார்க்கின்ற வகையில் வினைத்திறனும் திருப்திகரமானதுமான சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கக் கூடிய மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய சுய அதிகாரம் கொண்ட சுயாதீனப் பிரிவொன்றாக உள்ளூராட்சி மன்றங்கள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு வலியுறுத்தியது. இந்த அபிப்பிராயங்களை அடைந்துகொள்வதற்குப் பொருத்தமான நிறுவனமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் இருக்குமெனக் கருதப்பட்டது. பொதுமக்களுக்கு நெருக்கமான ஜனநாயக நிறுவனம் என்றவகையில், மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனமாக செயற்படும் ஆற்றலைக் கொண்டுள்ள பண்புகள் இந்த நிறுவனத்திற்கு உரித்தானதாகவுள்ளன. இந்த அபிப்பிராயங்களுக்கமைய செயற்பட்டு 1999 இன் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டது. அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் அதன் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு வினைத்திறனும் திருப்திகரமுமான சேவையை நிறைவேற்றக்கூடிய வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவத்தையும் நிறுவன ரீதியான செயலாற்றுகை மட்டங்களையும் வளர்ப்பது இந்த நிறுவகத்தின் அடிப்படை நோக்கமாகும். 1987 இன் 13 ஆம் இலக்க அரசியல் யாப்பின் திருத்தத்திற்கமைய, ஆட்சி அதிகாரங்களை பன்முகப்படுத்தும் முறைமை உருவானது. ஆட்சி அதிகாரத்தை கையளிக்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கும் ஜனநாயக ரீதியான அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குமாக பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்தை முறையாக அமுல்படுத்துவது அத்தியவசியமான நிபந்தனையொன்றாகும். அதற்கமைய நிறுவன ரீதியான நிருவாகச் செயற்பணியொன்றை மாகாண சபை மட்டத்தில் தாபிக்க எதிர்பார்க்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டு தற்போது 12 வருடங்கள் கடந்துள்ளன. இந்தக் காலப்பகுதிக்குள் வருடாந்தம் அமுல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் அமுல்படுத்தப்படுவதுடன் இந்த நிறுவகத்தின் நிருவாக சபையின் வழிகாட்டலின் கீழ் நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உற்பத்தித் திறன் மிக்கவாறு அடைந்து கொள்வதற்கான எண்ணக்கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கை உள்ளூர் ஆளுகை

நிறுவகம் தமது எண்ணக்கரு ரீதியான இலக்குகள், நோக்கங்களை குறுங்காலத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்தும் பொருட்டு சர்வதேச உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது. இந்த நிறுவகத்தின் விசேட மதியுரைப் பணிக்கான சபையின் பல்வேறு பங்களிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பங்களிப்பு நிறுவனத்தின் உத்தேச நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெரும் உதவியாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும், பன்முகப்படுத்தும் வேலைத்திட்டம் ஓரளவு தூரமாகியுள்ளது, குறிப்பாக அமுல்படுத்தும் பணிகளிலாகும். உதாரணமாகக் குறிப்பிடுவோமானால்,

- பன்முகப்படுத்துவதன் பெறுபேறாக இடம்பெறக்கூடிய வினைத்திறன் மற்றும் சமூகத்தின் முன்னுரிமை மற்றும் துரிதமாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு வளங்களை பகிர்ந்தளிப்பதை உறுதிப்படுத்தல்.

- கொள்கைகளைத் தயார் செய்யும் போது பன்முகப்படுத்தலினூடாகக் கிடைக்கின்ற பயன்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் மற்றும் இலக்குக் குழுக்களின் தேவைகளுக்காக கொள்கைகளை அமுல்படுத்தல்.

- வறுமையை குறைக்கும் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பன்முகப்படுத்தலின் மூலம் கிடைக்க வேண்டிய பயன்மிக்க நிலைமை.

- குறிப்பாக வறுமையினால் பாதிக்கப்படுகின்ற மக்களின் மற்றும் பிரஜைகள் தொடர்பில் காட்டப்படுகின்ற முன்னுரிமையை வெளிப்படுத்தும் பொருட்டு இந்த மட்டங்களில் மேற்கொள்ளும் தீர்மானங்களை அமுல்படுத்தல்.

- கிராமிய மட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் பங்கேற்புடனான தீர்மானம் மேற்கொள்வதில் கவனம் செலுத்தல்.

உள்ளூராட்சி மன்றங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற மாகாண மட்டத்திலான ஜனநாயக செயற்பாடு தொடர்பில் வழிகாட்டுவதற்கான கவனம் செலுத்தல்கள் ஒவ்வொரு வருடமும் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாட்டை மாற்றியமைப்பதாகும்.

## 4.1 தத்துவ ரீதியான அதிகாரங்கள்

உபாய முறையிலான திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரச துறையின் நிறுவனமொன்று என்றவகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தாபிக்கப்பட்டது.

- உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவியணியினரைப் பயிற்றுவிப்பதற்கு வினைத்திறன் மிக்க பதவியணியினரை இந்த நிறுவனம் ஊடாக உருவாக்குவதற்கும் அதன் மூலம் நல்லதொரு நிறுவாகத்தை நாட்டில் பிரபல்யப்படுத்துவதற்கும் உதவுதல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முகாமைத்துவக் கட்டமைப்பையும் செயற்பாடுகளையும் நுட்பமான முறையில் மதிப்பிடுவதற்கானதொரு கலந்துரையாடலை தயார் செய்தல்.

- முகாமைத்துவத்தை மேம்படுத்தும் போது பிரதேச ரீதியான முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி அலகுகளுக்கு உதவுதல்.

- உள்ளூராட்சி பற்றிய தேசிய கொள்கைகளைத் தயார் செய்வதற்குத் தேவையான தகவல்களை கௌரவ அமைச்சருக்குப் பெற்றுக்கொடுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுவதற்கும் தகல்களைப் பிரபல்யப்படுத்துவதற்கும் கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துவதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு இணையத்தளங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

## 4.2 நோக்கு

"மதியுரைச் சேவை, பயிற்சி, ஆராய்ச்சிச் சேவைகளின் ஊடாக உள்ளூராட்சியின் முதற்தர தேசிய நிறுவனமாக மாறுவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்"

## 4.3 செயற்பணி

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகள் ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான முன்னணி தேசிய நிறுவனமாக மாறுதல்"

## 4.4 நோக்கங்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பணி பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றது.

1. உள்ளூராட்சி மன்றங்களின் தாபன ஆற்றலை மேம்படுத்துவதற்கான செயலாற்றுகைக்கு ஏற்புடையதாகின்ற நிகழச்சித்திட்டங்களை மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் இணைந்து தயார் செய்தல்.

2. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை வளர்ப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்வதற்காக மற்றும் நடாத்துவதற்காக மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளை வலுவூட்டுவதும், அப்பணிகளுக்கு உதவுவதும்.

3. உள்ளூராட்சித் துறையின் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் வேறு தகவல்களைப் பெற்றுக் கொடுத்து உள்ளூராட்சி பற்றிய வள நிலையமாக செயற்படுதல்.

4. உரிய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக உள்ளூராட்சி தொடர்பான கேந்திர நிறுவனமொன்றாக செயற்படுதல்.

5. மனித வள முகாமைத்தவத்தை மேம்படுத்தல், முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்கள் போன்றன தொடர்பில் விசேடமான உதவிச் சேவைகளை ஆற்றுதல்.

6. உள்ளூராட்சி மன்றங்களை வலுவூட்டுவதற்கான பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தல்.

## 4.5 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உள்ளூராட்சிக்கான மதியுரைச் சேவை

ஆலோசனைச் சேவைகளுக்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது, ஆறு (06) பிரிவுகளைத் தாபித்துள்ளது.

அ. பொறியியல்
ஆ. பொது முகாமைத்துவம்/மனித வள அபிவிருத்தி
இ. பௌதீக திட்டமிடல்
ஈ. நிதி முகாமைத்துவம்
உ. ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்
ஊ. சட்டரீதியான பணிகள்

## 4.6 இலக்குக் குழுக்கள்

- பயிற்சிகள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய செயலமர்வுகள் போன்ற பயன்களைப் பெறுகின்ற 9 மாகாணசபைகள் மற்றும் 335 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 418 பிரதிநிதிகள் மாகாண சபைகளிலும் 4391 பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களிலும் உள்ளனர். உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்ற அலுவலக ஊழியர்கள், வெளிக்கள ஊழியர்கள் போன்ற பல்வேறு தரங்களைச் சேர்ந்த சுமார் 50,000 ஊழியர்கள் உள்ளடங்குகின்றனர்.

- இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள அவ்வவ் குழுவினர்கள் மற்றைய குழுவினரிலிருந்து வித்தியாசப்படுகின்றர். மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளுடன் கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் தேவைப்பாடுகளுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மாகாண திட்டமிடல் தொடர்பாக ஒத்துழைப்பு ரீதியான செயற்பணியொன்று எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

- 2012 ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்டுள்ள பயிற்சித் தேவைகளுக்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுத்து 2012 ஆம் ஆண்டில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 4.7 ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும்

மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர்களினால் (மாகாணம்) நடாத்தப்படுகின்ற பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதும், கண்காணிப்புச் செய்வதும் இந்த நிறுவனத்தின் முக்கிய பணியொன்றாகக் கருதப்படுகின்றது. மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி அலகுகள் மற்றும் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற மாதாந்த மீளாய்வுக் கூட்டங்களின் போது முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.8 வியாபார அபிவிருத்தி

அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் பல அவர்களின் பெரும்பாலான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் உதவியை எதிர்பார்ப்பதை கடந்தகால அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கருத்திட்டங்களை இனங்காண்பதற்காக இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அவசியமாகும். இந்த வியாபார அபிவிருத்தி நடவடிக்கைகள் எமது நிறுவகத்தின் பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்றன. அவர் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் தகுந்தவாறு அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார்.

## 4.9 தேசிய மற்றும் சர்வதேச கற்கை, பயிற்சி நிறுவனங்களுடனான தொடர்புகள்

தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தொடர்புகளைக் கொண்டுள்ளது. இந்தத் தொடர்புகள் இரு தரப்பினரதும் நலனுக்காகப் பேணிவரப்படுகிறதன. இவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்ற தொடர்புகள் நாட்டிற்கு வெளியேயான பயிற்றுவிப்புத் தேவைகள் மற்றும் அவர்களின் ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றது. (CITY NET AND LOGOTRI).

LOGOTRI, UESCAP, JAIKA, CITY NET, USAID மற்றும் UN Habitat ஆகிய நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகத் தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்கும் 2012 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் எதிர்பார்த்ததுடன் அவ்வாறு செயற்பட்டது.

## 4.10 இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் முகாமைத்துவ ஒழுங்கமைப்பு

நிறுவகத்தின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடு பற்றிய சகல தீர்மானங்களும் நிர்வாக சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சில அமைச்சுக்களின் செயலாளர்களும் தொழில்சார் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நிருவாக சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

நிருவாக சபையின் அழைப்பாளர் என்ற வகையில் செயற்படுகின்ற பணிப்பாளர் இந்த நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். நிருவாக சபையின் ஒட்டுமொத்த வழிகாட்டல்களும் அவரின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பணிப்பாளரின் உதவிக்கு ஆலோசனைக் குழுவொன்று, பிரதிப் பணிப்பாளர்கள், கணக்காளர் மற்றும் உதவிப் பதவியணியினர் உள்ளனர். நிறுவகத்தின் செயலாற்றுகையை மேம்படுத்த வேண்டிய அவசியத்தன்மைக்கமைய ஒட்டுமொத்த இலக்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் பல்வேறு துறைகளின் கீழ் தற்போது ஒழுங்கமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. மனித வள அபிவிருத்திப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது முகாமைத்துவம், பௌதீகத் திட்டமிடல், நிதி முகாமைத்துவம், சட்ட ரீதியான பணிகள், ஆராய்ச்சி, வெளியீடுகள், நிருவாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகள் இதன் கீழ் காணப்படுகின்றன.

### 4.11 உதவிப் பதவியணியினரை வளர்த்துக்கொள்ளல்

அபிவிருத்தி/ நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக பட்டதாரிகள் அண்மைக்காலத்தில் நியமனம் செய்யப்பட்டதையடுத்து, சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் மனித வளச் செயலாற்றுகை வளர்ச்சியடைந்துள்ளது. இது ஒரு சாதகமான காரணியாகும். எவ்வாறாயினும் ஊழியர்களிடமிருந்து நல்லதொரு சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூராட்சியின் செயலாற்றுகையையும் அந்த செயலாற்றுகையின் தரத்தையும் மேம்படுத்துவது அத்தியவசியமானதொரு விடயமாகும்.

எனவே, வினைத்திறன் மிக்கதும் விளைவுத்திறன் மிக்கதுமான சேவை நிலைமையை உருவாக்கிக் கொள்வதற்காக அவர்களின் அறிவையும் புரிந்துணர்வையும் மேம்படுத்துவதற்காக பதவியணியினரை அறிவுறுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் எமது நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டுள்ளன.

## 5.0 2012 ஆம் ஆண்டுக்கான நிறுவத்தின் பதவியணியினரது ஒழுங்கமைப்பு

2012 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த பதவியணியினர் பற்றிய ஒழுங்கமைப்பு பின்வருமாறாகும்.

| பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | | | சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | நிறைவேற்று | நிறைவேற்று அல்லாத | மொத்தம் | நிறைவேற்று | நிறைவேற்று அல்லாத | மொத்தம் |
| நிருவாகம் | 01 | 21 | 22 | 02 | 20 | 22 |
| மனித வளப்பிரிவு | 01 | 01 | 02 | - | - | - |
| பொறியியல் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பொது முகாமைத்துவப் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| பௌதீகத் திட்டமிடல் பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| நிதி முகாமைத்துவப் பிரிவு | 01 | 01 | 02 | - | 01 | 01 |
| சட்டப்பிரிவு | 01 | 01 | 02 | 01 | 01 | 02 |
| ஆராய்ச்சிப் பிரிவு | 01 | 02 | 03 | 01 | 02 | 03 |
| பயிற்றுவித்தல் பிரிவு | 01 | 01 | 02 | - | - | - |
| கணக்குகள் பிரிவு | 01 | 03 | 04 | 01 | 03 | 04 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | - | 01 | 01 | - | - | - |
| **மொத்தம்** | **10** | **34** | **44** | **44** | **30** | **38** |

## 6.0 2012 ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை

| | விபரம் | அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் | மொத்தச் செலவினம் | அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினைப் பயன்படுத்திய விகிதம் | நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | தேசிய மட்டத்தினலான நிகழ்ச்சித்திட்டங்கள் | 12,750,000.00 | 11,000,684.96 | - | - | - |
| | மனித வள அபிவிருத்திப் பிரிவு | 2,125,000.00 | 2,332,656.59 | 110% | 100 | - |
| | பொறியியல் பிரிவு | 2,125,000.00 | 401,231.00 | 19% | 18 | - |
| | பொது முகாமைத்துவப் பிரிவு | 2,125,000.00 | 1,852,064.70 | 87% | 37 | - |
| | பௌதீகத் திட்டமிடல் பிரிவு | 2,125,000.00 | 1,598,391.30 | 75% | 39 | - |
| | நிதி முகாமைத்துவப் பிரிவு | 2,125,000.00 | 2,263,618.40 | 106% | 74 | - |
| | சட்ட நடவடிக்கைகள் பிரிவு | 2,125,000.00 | 2,552,813.97 | 120% | 50 | - |
| 02 | மாகாண மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | - | 234,367.00 | - | 12 | - |
| 03 | நிறுவனத்தின் ஆற்றல் விருத்தி | 2,125,000.00 | 2,591,848.35 | 122% | 40 | 03 |
| 04 | ஆராய்ச்சி, நூலகம் மற்றும் வெளியீடுகள் | 2,125,000.00 | 2,753,816.87 | 130% | 68 | - |
| **மொத்தம்** | | **17,000,000.00** | **16,580,717.18** | **91%** | **438** | **03** |

## 7.0 ஒவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றுகைத் தகவல்கள்

## 7.1 மனித வள அபிவிருத்திப்பிரிவு

உள்ளூராட்சி மன்ற அலுவலர்களினதும், தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களினதும் மாகாண சபை அலுவலர்களினதும், பதவியணியினரதும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான பூரண பொறுப்பு இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தின் மனித வள அபிவிருத்திப் பிரிவின் கீழ் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் பதவியணியினர் மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் மனித வளப் பணிகள் 2010 உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக அந்தக் காலத்தின் அடிப்படையில் நல்லதாக அமைந்தது. அதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அங்கத்தவர்களின் பயிற்றுவித்தல் தேவைகள் மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அது தவிர புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரிகள் மற்றும் ஏனைய பதவியணியினரும் இருப்பதனால் அவர்களுக்கும் எமது நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- ஒதுக்கப்பட்ட முதலில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 2,333
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 100
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 110 சதவீதம்

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத்திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| HRD/01 | அறிவுறுத்தல் செயலமர்வுகள் | 08 | 04 | 288,000.00 | 143,080.75 |
| HRD/03 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வுகள் | 08 | 16 | 360,000.00 | 593,565.65 |
| HRD/02 | உள்ளூராட்சி பயிற்சி அலகுகளுக்கான கூட்டங்கள் | - | - | 150,000.00 | 27,025.00 |
| HRD/02 | உள்ளூராட்சி மட்டத்திலான பயிற்சி செயலமர்வுகள் | - | 09 | 500,000.00 | 233,631.00 |
| | உள்ளூராட்சி பற்றிய உயர் டிப்ளோமா | - | 44 | - | 786,024.12 |
| HRD/01 | உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சு மற்றும் வேறு நிறுவனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள் | 01 | - | 97,000.00 | - |
| HRD/05 | கணினிப் பயன்பாடு பற்றிய சான்றிதழ் பாடநெறி | 24 | 18 | 200,000.00 | 347,222.27 |
| HRD/02 | புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான திறன்விருத்திச் செயலமர்வுகள் | 04 | 09 | 170,000.00 | 202,016.80 |
| HRD/04 | புதிதாக நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கான வினைத்திறனை மேம்படுத்துவதற்குரிய பயிற்சிச் செயலமர்வுகள் | 08 | - | 360,00.00 | - |
| | **மொத்தம்** | **59** | **100** | **2,125,000.00** | **2,332,565.59** |

## 7.2 பொறியியல் பிரிவு

உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்பப் பிரிவுகள் மற்றும் மாகாண சபைகளின் பொறியியல் பிரிவுகளின் செயலாற்றுகையை மேம்படுத்துகின்ற பொறுப்பைக் கொண்டு செயற்படுகின்ற இந்த நிறுவனத்தின் பிரிவு பொறியியல் பிரிவாகும். நிறுவன ரீதியான நோக்கங்களுக்கமைய பயிற்றுவித்தல், ஆராய்ச்சி போன்றவற்றினூடாக இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. பொறியியலாளர்கள், வேலைப் பொறுப்பு அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு உரிய துறைகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக திறன்களை விருத்திசெய்வது சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களும் மாகாண சபைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 401/-
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 18
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 19%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| E-02 | மாகாணசபைகளின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு | 04 | - | 240,000.00 | - |
| E-04 | உள்ளூராட்சி மன்றங்களின் புதிய தொழில்நுட்ப அலுவலர்களை அறிவுறுத்துவதற்கான பயிற்சி செயலமர்வு (சட்டம், வாகனப் பராமாரப்பு, வீதி நிர்மாணிப்பு, துப்பரவேற்பாடு) | 03 | 08 | 225,000.00 | 176,696.00 |
| E-01 | மாகாணப் பொறியியலாளர்களுக்கான விசேட செயலமர்வு | 03 | - | 183,000.00 | - |
| E-03 | பிரதேச சபைகளின் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு | 02 | 02 | 150,000.00 | 38,180.00 |
| E-05 | பின்னடைவான உள்ளூராட்சி மன்றங்களின் பொறியியலாளர்களுக்கான மதியுரைச் சேவை | 03 | - | 150,000.00 | - |
| E-06 | உள்ளூராட்சி மன்றங்களின் வேலைப் பொறுப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி செயலமர்வுகள் | 02 | 02 | 150,000.00 | 32,866.00 |
| E-07 | வட மாகாணத்திற்கான விசேட பயிற்சிச் செயலமர்வு | 03 | - | 310,000.00 | - |
| E-08 | கிழக்கு மாகாணத்திற்கான விசேட பயிற்சி செயலமர்வு | 02 | - | 167,000.00 | - |
| E-09 | தெரிவுசெய்யப்பட்ட செயலமர்வுகள் | 01 | - | 50,000.00 | - |
| E-10 | மாகாண மட்டத்திலான பயிற்சி செயலமர்வுகள் | 04 | 06 | 500,000.00 | 153,489.00 |
| | **மொத்தம்** | **27** | **18** | **2,125,000.00** | **401,231.00** |

## 7.3 பொது முகாமைத்துவப் பிரிவு

இலங்கையின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்காக இந்தப் பிரிவு தாபிக்கப்பட்டது.

அரசியல் தலைமைத்துவம், அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக அங்கத்தவர்கள் மத்தியில் காணப்படுகின்ற நிருவாக சிக்கல்கள், அதிகாரக் கையளிப்பு போன்ற விடயங்கள் சம்பந்தமாக அறிவுறுத்தி தமது நோக்கங்களை அந்த நிறுவனங்கள் அடைந்துகொண்டு வருகின்றன, பயிற்சித் தேவைகளை இனங்கண்ட பின்னர் இந்த நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் செயலாற்றுகையை வளர்ப்பது சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படுகின்றன.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 1,852/-
- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 37
- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 87%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| G.M 01 | ஆற்றல் விருத்திப் பயிற்சிச் செயலமர்வு | 12 | 19 | 600,000.00 | 1,045,010.00 |
| G.M 02 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான கருத்திட்ட முகாமைத்துவம் | 06 | 07 | 300,00.00 | 296,044.50 |
| G.M 03 | நூலக அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வுகள் | 02 | 05 | 100,000.00 | 293,370.00 |
| G.M 01 | பாலர் பாடசாலை அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வுகள் | 02 | - | 100,000.00 | - |
| G.M 01 | பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வுகள் | 02 | - | 100,000.00 | - |
| G.M 01 | பொதுசன தொடர்பு முகாமைத்துவம் | 04 | 01 | 200,000.00 | 25,790.00 |
| G.M 01 | உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிச் செயலமர்வுகள் | 03 | 040 | 125,000.00 | 149,150.20 |
| G.M 01 | பங்கேற்கும் முகாமைத்துவத்தின் மூலம் செயல் ரீதியான திட்டங்களைத் தயார் செய்தல் | 02 | 01 | 100,000.00 | 42,700.00 |
| G.M 01 | மாகாண மட்டத்திலான பயிற்சிச் செயலமர்வுகள் | - | - | 500,000.00 | - |
| | **மொத்தம்** | **33** | **37** | **2,125,000.00** | **1,852,064.70** |

## 7.4 பௌதீக திட்டமிடல் பிரிவு

பௌதீக திட்டமிடல் துறையின் அறிவு, கருத்துக்கள், நிபுணத்துவம் மற்றும் சேவை சார்ந்த தர நியமங்கள் பற்றிய அறிவை வளர்த்து இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் அரசியல் பிரதிநிதிகளினதும் சம்பந்தப்பட்ட வேறு அலுவலர்களினதும் செயலாற்றுகையை வளர்த்தல். பயிற்சி மற்றும் மதியுரைச் சேவைகளினால் நிறைவேற்றப்படுகின்ற செயலாற்றுகையை வளர்ப்பது இந்தப் பிரிவின் பிரதான நோக்கமாகும். இறுதி நோக்கமாகவிருப்பது, குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை மட்டம் மற்றும் சுற்றாடலை நல்ல முறையில் சிறந்ததாக மாற்றியமைப்பதாகும்.

- ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 1,598/-

- பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 39

- நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 75%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
| PP/NL/01 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான பௌதீகத் திட்டங்கள் சம்பந்தமான செயலமர்வுகள் | 04 | 03 | 160,000.00 | 129,245.00 |
| PP/NL/04 | GIS/GPS திறன் அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வுகள் | 15 | 17 | 750,000.00 | 594,357.00 |
| PP/NL/02 | அனர்த்த முகாமைத்துவம் பற்றிய பயிற்சிச் செயலமர்வுகள் | 04 | 04 | 160,000.00 | 219,542.00 |
| PP/NL/03 | விலை மதிப்பீடு பற்றிய செயலமர்வுகள் | 08 | 08 | 320,000.00 | 263,715.00 |
| PP/NL/05 | சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் | 04 | 04 | 160,000.00 | 172,444.50 |
| PP/NL/06 | உள்ளூராட்சி மன்றங்களுக்கான நகர வடிவமைப்பு கோட்பாடுகளைப் பயன்படுத்தல் | 02 | - | 75,000.00 | - |
| PP/NL/01 | மாகாண மட்டத்திலான பயிற்சி செயலமர்வுகள் | - | 03 | 500,000.00 | 119,086.00 |
| | **மொத்தம்** | **37** | **39** | **2,125,000.00** | **1,598,391.30** |

## 7.5 நிதி முகாமைத்துவப் பிரிவு

நிதி முகாமைத்துவப் பிரிவு பிரதானமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும்.

- ❖ நிதி முகாமைத்துவம் பற்றிய உள்ளூராட்சி மன்றப் பதவியணியினரின் அறிவையும் புரிந்துணர்வையும் வளர்த்தல்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு நிதி முகாமைத்துவம் பற்றிய செயலமர்வுகளை நடாத்தல், நிதி முகாமைத்துவம் பற்றிய வினைத்திறனை மேம்படுத்துவதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு மதியுரைச் சேவைகளையாற்றுதல்.
- ❖ நிதி முகாமைத்துவம் பற்றிய பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்.

இது சம்பந்தமாக இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் தயார் செய்துள்ள நிகழ்ச்சித்திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றுகையை மேம்படுத்தக் காரணமாக அமைந்துள்ளது. அது தவிர நிதி முகாமைத்துவம் பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளும் இன்னும் காணப்படுகின்றன. அவசியத்தன்மையின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் பற்றிய பயிற்சிச் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

- ❖ நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதும் சமர்ப்பிப்பதும்
- ❖ வரவுசெலவுத் திட்டத்தை தயார் செய்தல், வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு
- ❖ இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பற்றி அறிவுறுத்துவதும் அவற்றை ஏற்புடையதாக்குவதும்.
- ❖ காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிப் பாயச்சல் கூற்றுக்களைத் தயார் செய்தல்.
- ❖ இலங்கையின் கணக்காய்வும் கணக்காய்வு நியமங்களும் பற்றி அறிவுறுத்தல்.
- ❖ உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றி அறிவுறுத்தல்.
- ❖ உள்ளூராட்சி நிதி முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா பாடநெறியை நடாத்தல்.
- ❖ பின்னடைவான உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வது பற்றிய தொழில்சார் பயிற்சிகள்.

  - ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட தொகை - (இலங்கை ரூபா. 000) – ரூபா 2,264/-
  - பூர்த்திசெய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் – 74
  - நிதி பயன்படுத்தப்பட்டுள்ள விகிதம் – 106%

| வரவு செலவுத் திட்டக் குறியீடு | நிகழ்ச்சித்திட்டம்/ செயற்பாடு | வரவுசெலவுத் திட்டத்திற்கமைவான நாட்களின் எண்ணிக்கை | உண்மையான நாட்களின் எண்ணிக்கை | வரவுசெலவுத் திட்டத்தின் படியான செலவினம் | உண்மைச் செலவினம் |
|---|---|---|---|---|---|
